செ.வெ.எண்: 13 நாள்: 09.08.2020

**கரூர் மாவட்டம்**

**கரூர் மாவட்டத்தில் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.27.21கோடி மதிப்பில் 780 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன் இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

கரூர் மாவட்டம் க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம் தென்னிலை கிழக்கு ஊராட்சியில் கரை பாளையத்தில் ரூ9.90 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் தடுப்பணையை 08.08.202 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தஅன்பழகன்.இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது

கரூர் மாவட்டத்தில் வறட்சியான பகுதிகளில் நிலத்தடி நீரை செறிவூட்டும் வகையிலும் மழைக்காலங்களில் தண்ணீரை சேமித்து வைக்கும் வகையிலும் தடுப்பணைகள் அமைத்தல், பண்ணைக்குட்டைகள் கட்டுதல் போன்ற பல்வேறு வகையான பணிகள் நடைபெற்று வருகிறது

விவசாயம் செழித்தால்தான் நாடு செழிக்கும் என்ற உன்னத நோக்கத்தில், தானும் ஒரு விவசாயி என்ற காரணத்தால், விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பொன்னான திட்டமான குடிமராமத்து திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள நீர்நிலைகள், நீர்வழித்தடங்கள் புத்துயிர்பெற்றுள்ளது.

அந்த வகையில், கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் மாண்புமிகு முதலமைச்சரின் குடிமராத்து திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தின் கிராமப்புற பகுதிகளில் உள்ள குளம், குட்டைகள் சிறப்பாக துார்வாரப்பட்டுள்ளது. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் அவ்வப்போது மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்து, குறிப்பாக குடிமராத்துப்பணிகளை விரைந்து முடித்து விவசாயிகளுக்கு கடைமடைவரை நீர் செல்வதற்கும், குளம் குட்டைகளை துார்வாருவதற்கும், தடுப்பணைகள் மற்றும் பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணிகளை விரைந்து முடிக்கவும் துறை அலுவலர்களுக்கு அவ்வப்போது அறிவுரைகளை வழங்குவார்கள்.

அதனடிப்படையில், கரூர் மாவட்டத்தில் உள்ள எட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 157 ஊராட்சிகளில் 2019-2020ஆம் ஆண்டில் 104 சிறு பாசனக் குளங்கள் ரூ.10.26 கோடி மதிப்பிலும், 397 குளங்கள் மற்றும் குட்டைகள் ரூ.7.07கோடி மதிப்பிலும் துார்வாரப்பட்டுள்ளது. சமீப நாட்களாக அவ்வப்போது பெய்து வரும் மழையினால் துார்வாரப்பட்ட குளங்களில் தண்ணீர் நிரம்பி வருகின்றது.

அதுமட்டுமல்லாது, மாவட்ட ஊரகவளர்ச்சி முகமையின் மூலம் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் முயற்சியாக 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.27.21கோடி மதிப்பில் 780 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளது. நிலத்தின் அமைப்பிற்கேற்பவும், நீர்வரத்துக் கால்வாய்களின் அகலங்களைப் பொருத்தும் சிமெண்ட் தடுப்பணை, கருங்கல் தடுப்பணை, கம்பிவலை தடுப்பணைகள் என வகைப்படுத்தி சிறப்பான முறையில் தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளது. இதில் மழை அதிகம் பெய்துள்ள பகுதகளில் உள்ள 43 தடுப்பணைகள் முழுவதும் நீர்நிரம்பி அப்பகுதி மக்களின் விவசாயத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது.

க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மட்டும் 2019-2020 நிதியாண்டில் வலை கருங்கல் தடுப்பணைகள் தலா ரூ.1.70லட்சம் வீதம் 20 தடுப்பணைகள் 34 லட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது. அதேபோல் 34 கருங்கல் தடுப்பணைகள் தலா ரூ1.50 லட்சம் வீதம் ரூ.51 லட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 32 காங்கிரீட் தடுப்பணைகள் தலா ரூ.10 லட்சம் வீதம் ரூ.3.20கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது. இதில் 90 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. அதுமட்டுமல்லாது 2020 - 2021 ஆம் நிதியாண்டில் தலா ரூ.11.00 லட்சம் மதிப்பில் 48 காங்கிரீட் தடுப்பணைகள் கட்டுவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

“நீரின்றி அமையாது உலகு” என்ற பொன்மொழிக்கேற்ப கரூர் மாவட்ட ஊரகவளர்ச்சி முகமையின் மூலம் மேற்கொள்ளப்படும் திட்டங்களால் மாவட்டத்தின் பல்வேறு கிராமப்பகுதிகளில், விவசாயத்திற்கான நீர்த்தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதோடு மட்டுமன்றி, நிலத்தடி நீர்மட்டமும் பெருகி வருகின்றது. இந்த நிகழ்வு பொதுமக்களை மிகுந்த மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்றால் அது மிகையல்ல.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வின்போது ஊராட்சிகளுக்கான உதவி இயக்குனர் திரு. உமாசங்கர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. பழனிகுமார் திரு. பாலச்சந்தர் பொறியாளர் திரு.சங்கர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**